பேரிடர் மேலாண்மை

CONTENTS

1. அறிமுகம்
2. இயற்கைப்பேரிடர்கள்
3. பேரிடர் மேலாண்மையின் படிநிலைகள்
4. தேசிய பேரிடர் மேலாண்மை (National Disaster Management Authority)
5. தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்
6. உறுப்பினர்களின் விவரம்
7. தமிழக அரசின் மாநில செயலாக்க குழு
8. மாநில அறிவுரைக் குழு
9. தமிழ்நாடு மாநில பேரிடர் அபாய தணிப்பு முகமை
10. இம்முகமையின் முக்கிய செயல்பாடுகள்
11. பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகள் தொடர்பான ஒருங்கிணைப்புஅமைப்புகள்
12. மாநில அவசரகால கட்டுபாட்டு மையம்
13. மாவட்ட பேரிடர் மேலாண்மை
14. மாவட்ட அவசரகால கட்டுபாட்டு மையம்
15. அவசர காலங்களில் மேற்கொள்ளப்பட்ட வேண்டிய முதன்மைபணிகள்

அறிமுகம்

பேரிடர்கள், புவிக்காலநிலை வேறுபாட்டுக் காரணிகள் (Geo-climatic factors) காரணமாக ஏற்படுகின்றன. இவை மட்டுமல்லாமல் நிலவியல் கூறுகள், சுற்றுப்புறச்சூழல் சீர்கேடுகள், மக்கள்தொகைப் பெருக்கம், நகரமயமாதல் மற்றும் தொழிற்சாலைகளின் பெருக்கம் ஆகியவற்றின் காரணமாகவும் பேரிடர்கள் நிகழ்கின்றன.

- நிலப்பகுதியில் சீற்றம் ஏற்பட்டால், நிலநடுக்கமாகத் தோன்றிப் பேரழிவை ஏற்படுத்துகிறது. நீர் சீற்றம் அடைவதனால், வெள்ளப் பெருக்கெடுத்து

- நிலப்பகுதியில் சீற்றம் ஏற்பட்டால், நிலநடுக்கமாகத் தோன்றிப் பேரழிவை ஏற்படுத்துகிறது. நீர் சீற்றம் அடைவதனால், வெள்ளப் பெருக்கெடுத்து எண்ணற்ற அழிவுகள் ஏற்படுத்துகின்றன.
- காற்று சீற்றம் அடைவதால், புயல் உருவாகிப் பெரும்பாதிப்பை ஏற்படுத்துகிறது. மேலும், மழையின்மையால் நிலப்பரப்பு வெகு எளிதாக வறட்சியால் பாதிக்கப்படுகிறது.
- புவியின் உட்பகுதியில் வெப்பம் மற்றும் அழுத்தம் காரணமாக எரிமலைத் தீக்குழம்புகள் மேலெழும்பி வந்து பெரும்பாதிப்பை ஏற்படுத்துகின்றன.
- மழைக்காலங்களில் தோன்றும் மின்னல், இடி மற்றும் வெள்ளம் சில நேரங்களில் உயிரினங்களுக்கும் உடைமைகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.
- இயற்கைப் பேரிடர்கள் மட்டுமல்லாமல், மனிதனாலும் பல பேரிடர்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

### இயற்கைப்பேரிடர்கள்

- நிலநடுக்கம் (Earthquake)
- எரிமலை வெடிப்பு
- சுனாமி
- புயல் (Cyclone)
- வெள்ளப் பெருக்கு (Flood)
- வறட்சி (Drought)
- நிலச்சரிவு
- பனிச்சரிவு (Avalanche)
- மின்னல் மற்றும் இடி (Lingtning and Thunder)

### பேரிடர் மேலாண்மையின் படிநிலைகள்

இயற்கைச் சீற்றங்களினாலும், மனிதத் தவறுகளினாலும் பல்வேறு இடர்களும் பேரிடர்களும் ஏற்படுகின்றன. இடர் (Hazard) என்பது, அபாயகரமானதாக உணரக்கூடிய ஒரு

இயற்கைச் சீற்றங்களினாலும், மனிதத் தவறுகளினாலும் பல்வேறு இடர்களும் பேரிடர்களும் ஏற்படுகின்றன. இடர் (Hazard) என்பது, அபாயகரமானதாக உணரக்கூடிய ஒரு நிகழ்வு. அந்நிகழ்வில் மனிதனின் அன்றாட வாழ்க்கைப் பாதிப்பு, உயிரிழப்பு, சுகாதாரக் கேடுகள், உடைமைகளின் சேதம், சமுதாய மற்றும் பொருளாதாரச் சீர்கேடு, சுற்றுச்சூழல் சீர்கேடு ஆகியவை ஏற்படுகின்றன. இந்த இடரானது, உச்சநிலையை அடையும்போது பேரிடராக (Disaster) மாறுகிறது. மக்களின் ஆற்றலுக்கு அப்பாற்பட்டுப் பெருமளவில் உயிர்ச்சேதத்தையும் பொருட்சேதத்தையும் ஏற்படுத்தும் ஒரு நிகழ்வைப் பேரிடர்" என்கிறோம்.

பேரிடர்களின் தன்மைகளை அறிந்து, அவற்றால் ஏற்படும் தீமைகளிலிருந்து விடுபட உதவும் உத்திகளைச் செயல்படுத்துவதே பேரிடர் மேலாண்மை ஆகும்.

### DM 1 பேரிடர் தாக்கத்தை எதிர்கொள்ளத் தேவைப்படும் முன்னேற்பாடுகள்

- பேரிடரின் தன்மை, தீவிரம், தாக்கும் இடங்கள் மற்றும் இழப்புகளை அறிதல்
- பேரிடரைத் தவிர்க்க இயற்கை வளங்களைச் சேகரித்தல் மற்றும் எதிர்கொள்ள மனித வளங்களை ஆயத்தப்படுத்துதல்
- தகவல் தொடர்புகளை மேம்படுத்தி வைத்தல்
- பாதுகாப்பு அமைப்புகளை ஏற்பாடு செய்தல் பெண்கள், குழந்தைகள் மற்றும் இயலாதோர்களைக் காக்கும் உத்திகளை வகுத்தல் உணவுப் பொருள்கள், எரிபொருள்கள் (சமையல் வாயு), குடிநீர், உயிர்காக்கும் மருந்துகள், துணிமணிகள்,

எரிபொருள்கள் (சமையல் வாயு), குடிநீர், உயிர்காக்கும் மருந்துகள், துணிமணிகள், முதலுதவிப் பொருள்கள் முதலியவற்றைப் பேரிடர் காலங்களில் சேகரித்து வைத்தல்

DM 2 **எச்சரிக்கை**

- எச்சரிக்கைகளைச் சரியாகப் புரிந்துகொள்ளல்
- வதந்திகளைப் பேரிடர் காலத்தில் நம்பாதிருத்தல்
- உரிய முன்னெச்சரிக்கைகளை உடனடியாகப் பின்பற்றுதல் இதனால் உயிர்ச்சேதம், பொருட்சேதம் ஆகியவை வெகுவாகக் குறையும்)

DM 3 **பாதிப்பு ஏற்படுத்தும் நிலை**

- பேரிடர் தாக்க இருப்பதற்கான தெளிவான அறிகுறிகள் தென்படுதல்
- உயிர், உடல் மற்றும் உடைமைகளைப் பாதுகாப்பது பற்றிய பயம் மற்றும் பீதி அடையாதிருத்தல்
- பதற்ற நிலை, பரிதவிப்பு நிலையைத் தவிர்த்தல்
- அபாய அறிவிப்பு மற்றும் பாதுகாப்பு உத்திகளை மேற்கொள்ளல்
- பாதுகாப்பு நடவடிக்கைகளை விரைவுப்படுத்துதல்

DM 4 **பேரிடரின்போது மேற்கொள்ள வேண்டிய மீட்பு நடவடிக்கைகள்** (Rescue operation)

- தாமதமின்றி மீட்புப் பணிகளில் ஈடுபடுதல் மற்றும் மீட்புப் பணிக் குழுவினர்களுக்கு உதவுதல்
- பேரிடர்களில் சிக்குண்டு தவிப்பவர்களைக் காப்பாற்ற பாதுகாப்புப் படை பாதுகாப்பு கருவிகள், உணவு, உயிர்காக்கும் மருந்துகளைப் பயன்படுத்துதல்
- மீட்கப்பட்டவர்களுக்கு முறையாகப்

- மீட்கப்பட்டவர்களுக்கு முறையாகப் பயிற்சி பெற்றவர்கள் மூலமாக முதலுதவி உடனடி மருத்துவச் சிகிச்சையளித்தல்

DM 5 **பேரிடருக்குப்பின் மேற்கொள்ளப்படும் மீட்பு உதவிகள்** (Rescue)

- ஒருங்கிணைந்து செயல்படுதல்
- தற்காலிகப் புகலிடம் அமைத்துத் தேவையான பொருள்களைத் தொடர்ந்து வழங்குதல்
- மின்சாரவசதி, தொலைதொடர்புக் கருவிகளை அமைத்துக் கொடுத்தல் சேத மதிப்பீடு செய்தல்
- பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான உதவிகளை அரசு । பிற தொண்டு நிறுவனங்கள் மூலம் பெற்றுத் தருதல்

DM 6 **புனர்வாழ்வளித்தல்** (Rehabitation)

- பாதிப்படைந்தவர்களின் மறுவாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்தல்
- பாதிப்படைந்தவர்கள் மீண்டும் தன் பழைய வாழ்க்கை நிலைப்பாட்டை அடையத் தேவைப்படு வசதிகளையும் வாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தருதல்

DM 7 **மறுசீரமைத்தல்**

- பேரிடர்களால் பாதிப்பிற்குள்ளானவை மீண்டும் தாக்காதவாறு மறுசீரமைத்தல்
- இடிந்த கட்டடங்களைப் புதுப்பித்தல், மின்சாரம் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்களைச் சரி

DM 8 **பேரிடரைத் தவிர்க்க நீண்டகாலத் திட்டம் தீட்டுதல்** (Long term Planning)

DM 8 **பேரிடரைத் தவிர்க்க நீண்டகாலத் திட்டம் தீட்டுதல்** (Long term Planning)

- பேரிடர் மேலாண்மைக் குழுக்களுக்கான குறிக்கோள், செயல் திட்டம், தேவை செலவினங்கள்முதலியவற்றைத் தெளிவாக வரையறுத்தல்
- பேரிடர்கள் ஏற்படும்முன், ஏற்படும்போது, ஏற்பட்டபின் மேற்கொள்ள வேண் நடவடிக்கைகளுக்கான ஒருங்கிணைந்த முன்னேற்பாடுகளை வரையறுத்தல்
- பாதுகாப்புக் குழுக்களை அமைத்து, முன்னெச்சரிக்கை உத்திகளைத் திட்ட சேதாரத்தை மதிப்பீடு செய்தல்
- பேரிடர், மீண்டும் தாக்கும் இடங்களை இனங்கண்டு கொள்ளல்.
- பேரிடர்கள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் கல்வியறிவைப் பரப்ப ஒருங்கிணைப்பு செயல்திட்டம் தீட்டுதல்

DM 9 **திட்டச் செயலாக்கம்**

- பேரிடர் தவிர்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்துதல்
- மத்திய, மாநில, மாவட்ட வட்டார கிராம மற்றும் உள்ளூர் இடர் பாதுகாப்புக் குழுக்களுக்குப் பேரிடர் மேலாண்மைப் பயிற்சி அளித்தல்
- பேரிடர் தவிர்ப்புத் திட்டச்செயல்பாடுகள் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்குத் தொடர்ந்து ஏற்படுத்துதல்.

**தேசிய பேரிடர் மேலாண்மை** (National Disaster Management Authority)

---

பேரிடர் மேலாண்மைச் சட்டம் (2005), (டிசம்பர் 23, 2005) எண். 53, இந்திய நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையால் 28, நவம்பர் 2005 லும், மக்களவையால் 12 டிசம்பர் 2005 லும் நிறைவேற்றப்பட்டது. 2006 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் நாள் இச்சட்டம் இந்திய குடியரசுத்

9 ஆம் நாள் இச்சட்டம் இந்திய குடியரசுத் தலைவரின் அனுமதியைப் பெற்றது. பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005, 11 அத்தியாயங்கள் மற்றும் 79 பிரிவுகள் கொண்டதாகும். இச்சட்டம் இந்தியா முழுவதற்கும் பொதுவானதாகும். இந்தச் சட்டம் "பேரிடர்களின் திறமையான மேலாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய இதர நிகழ்வுகைளத் தவிர்த்தல் குறித்தும் விளக்குகிறது.

தேசிய பேரிடர் மேலாண்மை முகமை (NDMA) என்பது உள்துறை அமைச்சகத்தின் ஒரு நிறுவனமாகும். இதன் பிரதான நோக்கம் இயற்கை அல்லது மனிதர்களால் உருவாக்கப்பட்ட பேரிடர்களின் போதும், நெருக்கடி காலத்தின் போதும் விரைந்து பணியாற்றத் தேவையான செயல்திறன் மேம்பாடு மற்றும் பேரழிவு மீட்பு பொறுப்புகைளயும் செயல்படுத்துவதாகும். இம்முகமை டிசம்பர் 2005 ல் இந்திய அரசால் இயற்றப்பட்ட பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டதாகும். பிரதம மந்திரி இதன் (NDMA) முழுமையான அதிகாரம் பெற்ற தலைவர் ஆவார். இந்நிறுவனம் கொள்கைகளை வடிவமைத்தல், வழிகாட்டுதல் மற்றும் சிறந்த நடைமுறைகளை உருவாக்கும் பணிகளை மேற்கொள்வதுடன், மாநில பேரிடர் மேலாண்மை முகமைகளுடன் முழுமையான மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட அணுகுமுறையை உறுதிப்படுத்துகிறது. மேலும் அவற்றுடன் ஒருங்கிணைந்து அனைத்துப் பணிகைளயும் செயல்படுத்துகிறது.

#### தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்

மாநிலத்தின் அபிவிருத்திகாகவும், மேம்பாட்டிற்காகவும் இடர்பாட்டு அபாய கவலைகள் நீக்கி ஒரு பாதுகாப்பான தமிழகத்தை உருவாக்கும் நோக்கத்துடன்

தமிழகத்தை உருவாக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையரகம் செயல்படுகிறது.

நம் சமூகத்தில் ஒரு நிலையான நிலைமையினை கொண்டு செல்ல பேரிடர் அபாயகுறைப்பு மற்றும் விரிதிறன்களை நீட்டிப்பதற்கான கொள்கையினை வரையறுத்து அதன் அடிப்படையில் தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையரகம் செயல்படுகிறது.

இதன் கவன ஈர்ப்பு பகுதிகளான, இயற்கை வள மேலாண்மை, விரிவான ஆற்றுவடி நில மேலாண்மை, இயற்கை சூழல் அமைப்பின் இயல்பு மற்றும் சமூக நலம் போன்றவற்றினை காக்க ஒரு நீட்டித்த மேலாண்மை திட்டம் தீட்டுதலின் வாயிலாக பல்வேறு அபிவிருத்தி மேம்பாட்டு திட்டம் செயல்படுத்துதலின் மூலம் தீங்கு விளைவிக்கும் பகுதிகளில் இடர் நீக்கி நீட்டித்த மேம்பாட்டினை ஊக்குவிக்கபடுகிறது.

மத்திய அரசின் பேரிடர் மேலாண்மை சட்டம் 2005 இயற்றப்படுவதற்கு முன்பே, தமிழ்நாடு அரசால், அரசாணை எண். 323 வருவாய் NCI (2)] துறை, நாள்: 08.07.2003-ன் மூலமாக, பேரிடர் நிகழ்வின் போது தணிப்பு மற்றும் ஆயத்த நிலை ஏற்பாடு போன்ற பணிகளை ஒருங்கிணைந்த வகையில் செயல்படுத்த தலைமைச் செயலாளர் அவர்களை தலைவராக கொண்டு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையர் அமைக்கப்பட்டது.

தேசிய பேரிடர் மேலாண்மை சட்ட பிரிவு 20(1)-ன் படி, மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு உதவும் வகையில் மாநில செயலாக்கக்குழு அமைக்கப்பட்டுள்ளது. மாநில